# உடுமலை அரசு கல்லூரியில் கருத்தரங்கு



உடுமலை அரசு கலைக்கல்லூரியில் சாகித்ய அகாடமி கருத்தரங்கு நடைபெற்றது.

உடுமலை, நவ. 17: சாகித்ய அகாடமியும், உடுமலை அரசு கலைக்கல்லூரியின் தமிழ்த்துறையும் இணைந்து "தமிழ் நாவல்களின் சமகாலப் போக்குகள்" என்னும் தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கம் கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) ராமலிங்கம் வாழ்த்துரை வழங்கினார். சாகித்ய அகாடமியின் தமிழ் ஆலோசனைக்குழு உறுப்பினர் ஆனந்தகுமார் தலைமை வகித்தார்.

'தமிழ் நாவல்களில் மார்க்சியம், தமிழில் புலம்பெயர் நாவல்கள், தமிழ் நாவல்களில் சுற்றுச்சூழலியல், தமிழ் நாவல்களில் பின்நவீனத்துவம்" ஆகிய நான்கு தலைப்புகளில் கருத்தரங்க உரைகள் நிகழ்த்தப்பட்டன. தமிழ்த்துறைத்தலைவர் மதியழகன், கோவை குமரகுரு கலை கல்லூரி பேராசிரியரும், எழுத்தாளருமான வேணுகோபால், மதுரைக் கல்லூரி பேராசிரியர் ரத்தினகுமார், கோவை பூசாகோ கலை கல்லூரி பேராசிரியர் ராமராஜ் ஆகியோர் கருத்தரங்க உரைகளை நிகழ்த்தினர்.

இதில் பல்வேறு கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் உட்பட 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். நிறைவாக பல்கலைக்கழக மானியக்குழு நடத்திய உதவிப்பேராசிரியருக்கான தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களை பாராட்டினர்.